1992 ஜனவரி 30]

ஏற்கும் நிகழ்ச்சியாகவும், நம்முடைய பேரவைச் செயலகத்திற்குப் பின்புறம் உள்ள பயிற்சி மைதானத்தில் நடைபெற இருக்கிற நிகழ்ச்சிக்காக, பேரவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 11.30 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை முற்பகல் 10.48 மணியளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

முற்பகல் 11-30

முற்பகல் 11.30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் தலைவர்கள் பட்டியல். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப் பேரவையின் மூன்றாம் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :

1. திரு. ம. சின்னசாமி.
2. திரு. வ. சத்தியமூர்த்தி.
3. திரு. ஆர். சிங்காரம்.
4. திரு. வே. தம்புசாமி.
5. திரு. நா. சா. பழனிசாமி.

5. சிறப்புக் குறிப்புகள்.

(அ) வினாப் பட்டியலிலுள்ள இரு வினாக்கள் எடுக்கப் பெறாதது பற்றி அறிவிப்புச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து. குறித்து.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விப் பட்டியலிலே இரு கேள்விகள் இருந்தன. அவற்றின் நிலை என்னவாயிற்று ?

[1992 ஜனவரி 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிவுற்றதற்குப் பின்னர் எஞ்சியுள்ள கேள்விகள் உடுக்குறியிடா வினாக்களாகக் கருதப்பட்டு அதற்குரிய பதில்கள் உடுக்குறியிடா வினாக்களோடு சேர்த்து வழங்கப்படும். அதுதான் விதி.

(ஆ) மின் கட்டண உயர்வு குறித்து அவையில் அறிவிக்காமல் வெளியே அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முக்கிய முடிவுகள் பொதுவாக அவையிலே அறிவிக்கப்படுவதுதான் முறை. அங்ஙனமிருக்க, மின்சாரக் கட்டண உயர்வு வெளியிலே அறிவிக்கப்பட்டு, அது பத்திரிகைகளிலேயெல்லாம் வந்த பிறகுதான் எங்களுக்குத் தெரிகின்றன. சாதாரணமாக, சட்டமன்றம் கூடுகின்ற அறிவிப்பை வெளியிட்டவுடனேயே அரசு எடுக்கிற முக்கிய முடிவுகளையெல்லாம், சட்டமன்றத்திலே தான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கிய முடிவுகள் என்று வராது; சில கொள்கை முடிவுகள் என்று இருக்கிறது. அதுகூட ஒரு மரபுதான். அது நீங்கள் அறியாதது அல்ல. ஆகவே, வேறு ஒன்றும் அதிலே வராது. அதிலே உங்களுடைய கருத்துக்களைச் சொல்லி விட்டீர்கள். அவ்வளவுதான். இது கொள்கை முடிவா, முக்கிய முடிவா என்பதெல்லாம் நிலைமையைப் பொறுத்து இருக்கிறது. நீங்கள் பேசும்பொழுது பேசலாம். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லி விட்டீர்கள். அதோடு முடிந்து விடுகிறது.

திரு. ச. இராமச்சந்திரன்: இந்த மாதிரியான முடிவுகளை பத்திரிகைகளிலே அறிவிப்பது மன்றத்தினுடைய மரபை மீறி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு உரிய முறைப்படி நீங்கள் எழுப்புங்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லி விட்டீர்கள். அதற்கு மீறி ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் உரிமைப் பிரச்சினை மாதிரி, அதை முறைப்படி எழுப்ப வேண்டும். திடீரென்று எழுந்தீர்கள், உங்களுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறீர்கள். அதற்குப் பிறகு என்னிடத்தில் இருந்தோ அல்லது அரசாங்கத்திடம் இருந்தோ முறையான பதிலை நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் அந்த முறைப்படி